நிர்ணயிப்பதற்கு பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் அதிகாரம் எடுத்துக் கொள்ளும்போது அதற்குமேல் பிளாக் அட்வைசரி கமிட்டிக்கு அவசியம் இருக்காது.

அதற்கடுத்தபடியாக, இங்கு செலவு செய்யக்கூடிய பல்வேறு இனங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகைகள், அதன் பிரகாரமே செலவழிக்கப்படவேண்டுமா, அல்லது வேறு விதமாக மாற்றியமைத்துக்கொள்ள முடியுமா என்பதைப்பற்றி சர்க்கார் கருத்தைத் தெளிவுபடுத்தும்படி கனம் அங்கத்தினர் ஸ்ரீ எம். பி. சுப்ரமண்யம் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலிடத்தில் ஒப்படைப்பதற்கு ஒரு முக்கிய காரணம் அந்தந்தப் பகுதியிலே இருக்கும் நிலைமையை அனுசரித்து, வேண்டுமானால் இந்தத் திட்டங்களை மாற்றியமைப்பதற்கு ஒரு அதிகாரம் கொடுக்க வேண்டும் என்பதற்காகத் தான். ஆனால், இது நாம் மட்டும் முடிவு செய்ய வேண்டிய விஷயம் அல்ல, . மத்திய அரசாங்கம் முடிவு செய்ய வேண்டியதாக இருக்கிறது. சில திட்ட அடிப்படைகளைக் கட்டாயம் நிறைவேற்றியாகவேண்டும், அவைகளை விவாதித்து இந்தத் திட்டங்களை மாற்றியமைக்கும் அதிகாரம் இந்தக் கவுன்சிலுக்குக் கொடுக்கவேண்டும் என்ற முறையிலேதான் இந்தப் பொறுப்புக்களெல்லாம் யூனியன் கவுன்சிலிலே ஒப்படைப்பது என்று முடிவு செய்திருக்கிறோம். ஆகவே, நடைமுறையிலே எந்த எந்த இனங்களை மாற்ற முடியும், எந்த எந்த இனங்களைக் குறிப்பிட்டபடியே செலவழிக்கவேண்டும் என்பதைப்பற்றியெல்லாம் நடைமுறையிலேதான் நிர்ணயம் செய்ய முடியும். அதற்காகத்தான், "சர்க்கார் விதிக்கின்ற கண்டிஷன்களுக்கு உட்பட்டு இதை அமுலுக்குக் கொண்டுவரவேண்டும்" என்ற திருத்தம் இதிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், இப்பொழுது இருப்பதிலே, நடைமுறையிலே என்ன என்ன திருத்தங்கள் செய்யவேண்டும் என்று திட்ட அடிப்படையிலே கூட செய்ய வேண்டியதைச் செய்துகொள்ளலாம் என்று சொல்லி இந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

The Government amendment was put and carried.

DEPUTY SPEAKER : As there are no amendments to clauses 67, 68 and 69, I shall put them to the vote of the House.

Sri M. S. Selvarajan rose to speak.

As the hon. Member wants to speak, these clauses can be taken up for discussion on Monday, the 29th instant.

The House will now rise for lunch and meet again at 3-15 p.m.

The House then adjourned.

[After lunch—3-15 p.m.]

(Mr. Speaker in the Chair.)

(2) THE MADRAS GENERAL SALES TAX (AMENDMENT) BILL, 1958
(L.A. BILL NO. 34 OF 1958).

MR. SPEAKER : Now we shall consider the Madras General Sales Tax (Amendment) Bill, 1958.

THE HON. SRI C. SUBRAMANIAM : Mr. Speaker, Sir, I move—

'That the Madras General Sales Tax (Amendment) Bill[a], 1958 (L.A. Bill No. 34 of 1958), be taken into consideration.'

---

[a] Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 23rd September 1958.

27th September 1958] [Sri C. Subramaniam]

The object of the Bill is to amend the Madras General Sales Tax Act, 1939 (Madras Act IX of 1939), to bring it into accord with the amendments to the Central Sales Tax Act, 1956 (Central Act 74 of 1956) sought to be made by the Central Sales Tax (Second Amendment) Bill, 1958, which has been passed by the Parliament and which is to come into force on 1st October 1958.

Section 15 of the Central Sales Tax Act, as now proposed to be amended, lays down among other things the tax payable by any dealer under the sales tax law of any State in respect of any sale or purchase of the declared goods specified in section 14 of that Act, shall not exceed 2 per cent of the sale or purchase price thereof and that such tax shall not be levied at more than one stage. Section 5-A of the Madras General Sales Tax Act accordingly regulates the levy of tax under that Act on the declared goods specified in section 14 of the Central Sales Tax Act. By the Central Sales Tax (Amendment) Act, 1957 (Central Act 16 of 1957), the Central Legislature has included cotton yarn but not including cotton yarn waste in the category of declared goods specified in section 14 of the Central Sales Tax Act, 1956. Section 5 (1) (v) of the Madras General Sales Tax Act, as it stands at present, provides for the taxation of cotton yarn other than hand-spun cotton yarn at half per cent at the point of first sale. Cotton yarn waste is also treated as cotton yarn for the purposes of levy of sales tax. As under the Central Sales Tax Amendment Act of 1957, only cotton yarn but not including cotton yarn waste has been included in the category of declared goods, cotton yarn alone, is proposed to be brought under section 5-A while cotton yarn waste is proopsed to be retained under section 5 (1) (v) of the Madras Act.

At present cardamom is assessed to a multi-point sales tax of 2 per cent at the point of purchase. The Government of India have included cardamom in the list of commodities which come under the category of oil seeds specified in section 14 of the Central Sales Tax Act. With reference to section 15 of that Act, only a single point tax not exceeding 2 per cent can be levied under the State law. It is therefore proposed to bring it under section 5-A and to levy a sales tax at 2 per cent at the point of first purchase. Clauses 2 and 3 of the Bill seek to give effect to these proposals.

New section 15 of the Central Sales Tax Act, 1956, proposed to be substituted by clause 11 of the Central Sales Tax (Second Amendment) Bill, 1958, provides that where a tax has been levied under the State law in respect of the sale or the purchase inside the State of any declared goods and such goods are sold in the course of inter-State trade or commence, the tax so levied shall be refunded to such person in such manner and subject to such conditions as may be provided in any law in force in this State. Sub-clause (iii) of clause 3 of the Bill seeks to add a sub-section for this purpose in section 5-A of the Madras General Sales Tax Act, 1939.

The Bill is a simple one and I request the House, Sir, to accept the motion.

MR. SPEAKER : The question is—

"That the Madras General Sales Tax (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 34 of 1958), be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 and 3 were put and carried.

Clause 1.

MR. SPEAKER : The question is—

"That Clause 1 do form part of the Bill."

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

"*For* sub-clause (2) of clause 1, *substitute* the following sub-clause, namely :—

'(2) It shall come into force on the first day of October 1958.'"

The amendment was put and carried.

Clause 1, as amended, was put and carried.

The preamble was put and carried.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

"That the Madras General Sales Tax (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 34 of 1958), as amended, be passed."

MR. SPEAKER : Motion moved—

"That the Madras General Sales Tax (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 34 of 1958), as amended, be passed."

* SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, I would request the Government to see that much difficulty is not experienced by the public. There is the fear that there may be some clash with regard the enforcement of this Bill with the Central Act. I would therefore request the Hon. Finance Minister to see that no such clash occurs while enforcing the provisions of this Bill, and also that there is no rigidity in enforcing it.

* SRI K. SATTANATHA KARAYALAR : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதா சட்டமாகும் இந்த சந்தர்ப்பத்தில் ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இதை நடைமுறைக்குக் கொண்டுவரும்போது விதிவிலக்கு கொடுத்திருக்கும் சில பொருள்களை நாம் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். அதாவது சமீப காலத்தில் காட்டன் வீட், **sugar** போன்றவைகளுக்கு, 1—4—57-லிருந்து விதி விலக்கு கொடுக்கப்பட்டது. ஆனால் பல இடங்களில் இதற்கு ஸேல்ஸ் டாக்ஸ் வாங்கிக் கொண்டிருந்தார்கள். அதன் பிறகு இது நேரடியாக 18—12—57-ல் மத்திய சர்க்காரின் சென்ட்ரல் எக்ஸைஸ் டாக்ஸில் விதிவிலக்கு கொடுத்ததின் பின்னால்தான் ஒவ்வொரு வியாபாரியும் வரி வாங்குவதை நிறுத்தியிருக்கிறார். ஆகவே சில பொருள்களுக்கு நாம் விதிவிலக்கு கொடுத்திருந்தாலும் அது நடைமுறையில் செயல் படாமல் இருந்துவருகிறது. ஆகவே இதற்கு தகுந்த முறையில்

நடவடிக்கை எடுத்துத்தான் ஆகவேண்டும். இவ்விதம் விதிவிலக்கு கொடுத்த பின்பும் அவர்கள் வரி வசூலித்துக்கொண்டிருப்பதின் காரணம் ஒருவேளை அவர்களுக்கு தகவல் தெரியாமல் இருக்கலாம். ஆகவே இவ்விதம் பல இடங்களில் வரி வாங்கப்பட்டிருக்கிறது. இவ்விதம் வாங்கப்பட்ட வரியைத் திரும்பக் கொடுப்பதற்கு என்ன முறை இருக்கிறது ? இப்போதுள்ள முறை பிரகாரம் என்ன செய்யப் போகிறார்கள் என்று தெரியவில்லை. சாதாரணமாக இவ்விதம் விதிவிலக்கு கொடுக்கக்கூடிய விபரம் காலா காலத்தில் வியாபாரிகளுக்கு கிடைப்பதில்லை. ஆகவே இவ்விதம் வரியிலிருந்து விலக்கு அளிக்கும்போது அந்த விபரத்தை எல்லா வியாபாரிகளுக்கும் அறிவிக்கும்படியான முறையில் ரெஜிஸ்டர் செய்திருக்கும் எல்லா வியாபாரிகளுக்கும் விற்பனை வரி ஆபீஸ் மூலமாக தெரியப்படுத்த ஏற்பாடு செய்யவேண்டும். குறிப்பிட்ட இன்னின்ன பொருள்களுக்கு எல்லாம் விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது, ஆகவே இந்தப் பொருள்களுக்கு எல்லாம் வரி வாங்கக்கூடாது என்று அவர்களுக்கு கண்டிப்பான உத்தரவும் போட வேண்டும். இது இல்லாத முறையில் மேலும் வரியிலிருந்து நீக்கப்பட்டிருக்கும் பொருள்களுக்கு வரி வசூலிக்கப்படுவதை அனுமதிக்கக் கூடாது என்றும், அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் சபாநாயகர் அவர்களே, எதிர்கட்சித் தலைவர் அவர்கள் இந்த சட்டத்தை அமுல் நடத்துவதில் கஷ்டங்கள் ஏற்படாமல் இருக்கும்படியாக பார்த்துக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார்கள். இப்போது சட்டத்தைத் திருத்துவது, மத்திய அரசாங்கத்தின் சட்டத்திற்கும் இந்த சட்டத்திற்கும் முரண்பாடு இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் இந்த திருத்தம் கொண்டுவரப் பட்டிருக்கிறது. மத்திய விற்பனை வரி சட்டத்தினுடைய அடிப்படை நோக்கம் என்னவென்று சொன்னால் இப்போது நம்முடைய ராஜ்யத்திற்குள்ளாகவே ஏற்படக்கூடிய விற்பனைக்கு அல்லது வாங்கக்கூடியவர்களுக்கு வரி போட முடியும். இதற்கான அதிகாரம் இந்த சபைக்கு இருக்கிறது. ஆனால் இங்கே இருக்கக்கூடியவர்கள் வெளியே இருக்கக்கூடியவர்களுக்கு ஒரு சாமானை விற்பனை செய்தால் அதைப்பற்றி இந்த சபைக்கு விற்பனை வரி போடுவதற்கு அதிகாரம் இருக்கிறதா என்பது சர்ச்சைக்குரியதாகவே இருந்தது. சில கோர்ட்டுகளில் இதற்கு அதிகாரம் இருக்கிறது என்று சொன்னார்கள். கடைசியில் சுப்ரீம் கோர்ட்டில் எல்லா ஜட்ஜுகளும் சேர்ந்து உட்கார்ந்து இந்த ராஜ்ய சபைகளுக்கு அதிகாரம் கிடையாது என்றும், அதற்குரிய அதிகாரம் பார்லிமெண்டுக்குத்தான் உண்டு என்றும் தீர்ப்பு அளிக்கப்பட்டது. அதற்கு பிற்பாடுதான் பார்லிமெண்டில் ஒரு ராஜ்யம் இன்னொரு ராஜ்யத்திற்கு விற்பனையாகக்கூடிய பொருள்களுக்கு விற்பனை வரி போடுவது என்று இந்த சட்டம் ஏற்பாடு செய்தது. அந்த சட்டத்திலும் முக்கியமாக அதில் இருக்கக்கூடிய அடிப்படையான கருத்து என்னவென்றால் எந்த இடத்தில் ஒரு பொருள் விற்பனையாகி, அங்கிருக்கின்றவர்கள் உபயோகப்படுத்துகின்றார்களோ அந்த இடத்தில்தான் வரி வசூல் செய்ய வேண்டும், அந்த வரி அந்த ராஜ்யத்திற்குச் சேர வேண்டும் என்ற அடிப்படையான கருத்தைக்கொண்டு இயற்றப்பட்டது. உதாரணமாக வங்காளத்தில் ஒரு பொருள் உற்பத்தியாகிறது என்று வைத்துக்கொள்ளலாம். அந்தப் பொருள் வியாபாரத் துறையின் மூலமாக சென்னை வருகின்றது என்று வைத்துக்கொள்ளலாம். அப்போது அந்தப் பொருள்களுக்கு அங்கு வரி வசூல் செய்யா விட்டால், இங்கே அதை உபயோகப் படுத்துகின்றவர்கள் இதற்கு வரி செலுத்த வேண்டியதாக இருக்கும். சென்னையிலே இருக்கின்றவர்கள் வங்க ராஜ்யத்தின் நன்மைக்காக வரி வசூலிக்க வேண்டும். இவ்விதம் ராஜ்யத்திற்கு ராஜ்யம் சில கட்டுப் பாடுகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதில் சாதாரணமான பொருள்களாக இருந்தால் பரவாயில்லை, ஒரு ராஜ்யத்திலிருந்து இன்னொரு ராஜ்யத்திற்கு உற்பத்தியை அடிப்படையாகக்கொண்டு பல பொருள்களை அனுப்பும்போது எந்த ராஜ்யத்திலிருந்து அந்த பொருள் உற்பத்தியாகிறதோ அந்த இடத்தில் இருந்து வசூல் செய்துகொள்ளக்கூடாது, எந்த இடத்தில் அந்த பொருள் அழிக்கப்படுகின்றதோ, அல்லது

உபயோகப்படுத்தப்படுகின்றதோ அந்த இடத்தில் வரி செலுத்த வேண்டும், அந்த வரியும் உற்பத்தியாகிற ராஜ்யத்திற்கு சேர வேண்டும். இதில் சில குறிப்பிட்ட பொருள்களை, அதாவது "டிக்ளேர்டு குட்ஸ்" என்ற முறையில் ஒரு ஜாபிதா தயாரித்து அந்தப் பொருள்களின் பேரில் ஒரே இடத்தில்தான் வரி விதிக்கவேண்டும் என்றும், அதுவும் 2 சத விகிதத்துக்கு மேல் இருக்கக்கூடாது என்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதாவது ஒரு இடத்தில் வரி வசூல் செய்த அதே பொருளுக்கு, இன்னொரு ராஜ்யத்திற்கு அந்தப் பொருள் ஏற்றுமதி செய்யப்படும்போது வரி வசூல் செய்திருந்தால் அதைத் திருப்பிக்கொடுக்கவேண்டும் என்று இருக்கிறது. அந்த அடிப்படையில் இப்போது திருத்தியிருக்கிறோம். இதன் காரணமாக பல முரண்பாடுகள் ஏற்பட்டன. ஆனால் எனக்குத் தெரிந்தவரையில் ஒரு தடவை வசூல் செய்த வரியை யாருக்கு எந்த கட்டத்தில் திருப்பிக்கொடுப்பது என்கிற பல பிரச்னைகள் வருகின்றன. இதைப்பற்றி பார்லிமெண்டின் ஆலோசனைக்கு நம்முடைய அரசாங்கத்திலிருந்து இதிலுள்ள முக்கியமான கஷ்டங்களை சொல்லியிருக்கிறோம். இந்த விஷயத்தில் பார்லிமெண்ட் எந்த முறையில் இதற்கு முடிவு எடுக்கின்றதோ அதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. இதைப் பொறுத்தவரையில் இந்த வரியைத் திருப்பிக் கொடுக்கிற முறையில் யாருக்குப் போய் சேர வேண்டும், இதை எந்த முறையில் கொடுக்க வேண்டும் என்கிற விஷயங்கள் எல்லாம் கஷ்டமாகவே இருக்கிறது. இருந்தாலும் இந்த விஷயத்தைப் பொறுத்தவரையில் பார்லிமெண்ட்தான் சட்டம் செய்யவேண்டியிருக்கும். அதன்படி நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கும். அதிலும் முக்கியமாக இங்கு இருந்து வந்த எதிர்ப்பு நூலுக்கு வரி இருக்கக்கூடாது என்பதுதான். இப்போது நூலில் முதல் கட்டத்தில் மாத்திரம் வரி வசூல் செய்து கொண்டிருக்கிறோம். முன்பு இருந்த 15-வது செக்ஷன் பிரகாரம் கடைசி கட்டத்தில் வரி செலுத்த வேண்டியதாக இருந்தது. இந்த முறையில் பார்க்கும்போது நம்முடைய ராஜ்யத்தில் பல லட்சக் கணக்கான கைத்தறி நெசவாளிகள் இந்த வரியை செலுத்த வேண்டியதாக இருந்தது. இதை மத்திய அரசாங்கத்தினிடத்தில் திருப்பித் திருப்பி எடுத்துச் சொல்லியதின் பலனாக மத்திய சர்க்கார் இதில் அருள் கூர்ந்து அந்த முறையை மாற்றினார்கள். அதற்காக நாம் பார்லிமெண்டுக்கும் மத்திய அரசாங்கத்திற்கும் நன்றி செலுத்த கடமைப் பட்டவர்களாக இருக்கின்றோம்.

3-30 p.m. ஆனால் இந்தச் சட்டங்களைச் செய்வதிலே அனுபவம் இருக்கக்கூடிய ராஜ்ய சர்க்கார்களிடமிருந்து விஷயங்களைத் தெரிந்து சட்டங்களைச் செய்தால் சில கஷ்டங்கள் வந்து சேரா என்று இந்த சமயத்தில் குறிப்பிடுவது அவசியமாக இருக்கிறது. நான் முன்பு சொன்ன மாதிரி மத்திய சர்க்கார் 2 வருஷங்களாகப் பிடிவாதமாக இருந்தார்கள். அப்படியே பிடிவாதமாகச் செய்திருந்தால், நமக்கு பெருத்த கஷ்டம் ஏற்பட்டிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இப்போதாவது திருத்தம் செய்ததற்காக நாம் நன்றி தெரிவிக்கக் கடமை பட்டிருக்கிறோம். ஆகவே, இப்போது இந்த மசோதாவை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று இந்தச் சபையை நான் கேட்டுக்கொள்கிறேன்.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR: On a point of clarification, Sir. I do not know whether this rule will apply to Pondicherry. I find that cars are manfacturered here, taken to Pondicherry, and registered there, with the result that our State loses revenue heavily. I would reuqest the Hon. Minister to clarify this point. As regards refund, I doubt very much whether the parties will live long to take refund. It will take some years to get refund, but I am not bothered about this. I would like the Hon. Minister to clarify the position with regard to Pondicherry—an inter-State affair.

[redacted]

27th September 1958]

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, Pondicherry continues to be a head-ache as far as sales-tax and other taxes are concerned. We have had consultations with Pondicherry administration. We are hoping that adjustments can be made and these anomalies easily removed. But the major difficulty is that until *de jure* transfer, Pondicherry does not form part of the Indian Union as such, even though the administration is under the control of the Central Government to a certain extent. That is why, certain adjustments in taxation matters, which would be necessary for the purpose of removing the anomalies, we are not able to bring about now. These anomalies will have to be put up with for some time more. I hope within the next year Pondicherry will be transferred to India by law, after which all these taxation measures would be reviewed and perhaps readjusted so that anomalies existing between neighbouring States and the Pondicherry pocket might be removed.

As far as refund is concerned, in the case of cotton yarn we are going to collect the tax from the mills. Therefore it may be easy to refund. But there are so many other declared articles in respect of which we may not be able to find the persons who really collected the tax and from whom the tax was collected. Perhaps the person who might be entitled to refund may not get the benefit at all.

(Sri N. K. Palanisami rose.)

MR. SPEAKER : The hon. Member cannot make a speech. It is only the privilege of the Leader of the Opposition. It cannot be had by other Members. The hon. Member came late. The hon. Member could have spoken at the clause-by-clause consideration stage. Anyway if this will not be taken as precedent by other Members, I have no objection to allow the hon. Member to speak now.

SRI N. K. PALANISAMI : ஸார், சென்ட்ரல் ஸேல்ஸ் டாக்ஸ் ஆக்ட் 4-ஏ-யில் பஞ்சும், அதைச் சார்ந்த பொருள்களும் என்று இருக்கிறது. இதைத் தனியாகக் கொண்டு வருவதற்குக் காரணம் என்ன ? இன்னொன்று, மிளகுக்கு பல முனை வரி விதிக்கலாம் என்றிருக்கிறது. அப்படி இருக்கும்போது, மிளகில் லாபம் இருக்கிறது என்ற காரணத்தினால், இப்போது ஒரு இடத்தில் மட்டும் வரி கொடுக்கவேண்டும் என்று சொன்னால் இவேஷன் இருக்கும். பல முனை வரியை மாற்றுவதன் காரணத்தை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்போதாவது கனம் அங்கத்தினர் பல முனை வரியின் மகத்துவத்தை உணர்ந்ததைப்பற்றி மகிழ்ச்சியடைகிறேன். We cannot question parliamentary wisdom here. We have to take the law as it is.

MR. SPEAKER : The question is—

"That the Madras General Sales Tax (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 33 of 1958, as amended, be passed ".

The motion was put and carried and the Bill, as amended, was passed.